

தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் ஆறுமுகநேரி தனியார் மண்டபத்தில் நடந்தது. இதில் அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் பேசுகையில் வருகின்ற 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200 இடங்களுக்கு மேல் தி.மு.க. வெற்றி பெற்று சாதனைப்படைக்கும் என பேசினார். உடன் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி நல்லூர் தெற்கு ஒன்றியம் பாசி குளம் கிராமத்தில் இருந்து பெலாந்துறை, கணபதி குறிச்சி, கிளிமங்கலம், குருக்கத்தாஞ் சேரி, பெண்ணாடம், விருத்தாசலம் வழியாக சென்னைக்கு புதிய அரசு பேருந்து வழித்தடத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 2026 சட்டமன்றத் தேர்தலில்

# 200 தொகுதிகளில் வெற்றி பெற்று சாதனை படைப்போம்!

## தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் பேச்சு!

தூத்துக்குடி, செப். 4 -

தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் ஆறுமுகநேரி தனியார் மண்டபத்தில் நடந்தது. இதில் அமைச்சர் அனிதாராதாகிருஷ்ணன் பேசுகையில் வருகின்ற 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200 இடங்களுக்கு மேல் தி.மு.க. வெற்றி பெற்று சாதனைப்படைக்கும் என பேசினார்.



தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்களின் கூட்டம் ஆறுமுகநேரி தனியார் மண்டபத்தில் வைத்து நடந்தது. இக்கூட்டத்திற்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் அருணாசலம் தலைமை வகித்தார். மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராமஜெயம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பிரம்மசக்தி, முன்னாள் எம்.எல்.ஏ. டேவிட்செல்வின், செந்தூர்மணி, மாவட்ட துணை செயலாளர்கள் ஜெயக்குமார் ரூபன், ஜெபதங்கம் பிரேமா, ஆறுமுக பெருமாள், மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் ஜெசிபொன்ராணி, ஆறுமுகநேரி பேரூராட்சி தலைவர் கலாவதி கல்யாணசுந்தரம், துணைத்தலைவர் கல்யாணசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆறுமுகநேரி நகர செயலாளர் நவநீதபாண்டியன் அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருக்கு 100 ரூபாய் நாணயம் வெளியிட ஆவன செய்த முதலமைச்சர் ஸ்டாலினை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிறப்பு விருந்தினராக அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு பேசுகையில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 40க்கு 40 நாடும் நமதே என்ற கோஷங்களுக்கு ஏற்ப 40 தொகுதிகளிலும் வெற்றி பெறவைத்த கழக முன்னோடுகளுக்கும், அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நமது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பி. கனிமொழி தேர்தலில் நின்ற போது எதிர்த்து நின்ற அனைவரும் டெபாசிட் இழப்பார்கள் என்று கூறினேன். அன்று நடைபெற்ற மாவட்ட செயலாளர் கூட்டத்தில் எவ்வாறு டெபாசிட் இழக்க முடியும் என கழகத்தில் உள்ளவர்கள் கேட்டார்கள். அதற்கு நமது நாடாளுமன்ற எம்.பி. கனிமொழி மீது மக்கள் அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். பாடாளுமன்றத்தில் மக்களுக்காக குரல் கொடுக்க கூடிய எம்.பி., நமது நாடாளுமன்ற உறுப்பினர் என கூறினேன். இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் எந்த ஒரு கூட்டணி கட்சியும் இதுபோன்று 100சதவீதம் வெற்றி பெற்ற சரித்திரம் இல்லை. இன்றைக்கு குறிப்பாக சொல்லப்போனால் ஒட்டப்பிடாரம் தொகுதி. ஒரு காலத்தில் யாரையாவது பழிவாங்க வேண்டுமென்றால் ராமநாதபுரத்தில் வேலை போடுவார்கள். தற்போது அந்த மாவட்டம் வளர்ச்சி அடைந்த மாவட்டமாக மாறிவிட்டது. அது போன்று ஒட்டப்பிடாரம் தொகுதி பல்வேறு தொழில்களை உருவாக்கும் வகையில் கார் தொழிற்சாலை என பல்வேறு தொழிற்சாலைகள் கொண்ட தொழில் மாநகரமாக மாறிவருகிறது. அதுபோல படிப்படியாக ஒவ்வொரு இடத்திலும் இந்த நிலை மாற்றப்படும் வகையில், வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் கவனத்திற்கு கொண்டு சென்று பல்வேறு வேலை வாய்ப்புகளை உருவாக்கி தருவோம் என பேசினார்.

மேலும் வருகின்ற 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் தலைவர் ஸ்டாலின் சொன்னதுபோல குறைந்தது 200 தொகுதிகள் வெற்றி பெற வேண்டும். தூத்துக்குடியில் உள்ள ஸ்ரீவைகுண்டம், ஒட்டப்பிடாரம், திருச்செந்தூர் ஆகிய 3 தொகுதிகளிலும் வெற்றி பெற்று முதல்வர் ஸ்டாலின் கரத்தில் சமர்ப்பிக்கவேண்டும். அதற்காக கழக முன்னோடிகள் இப்போழுதே அரசின் சாதனைகள், திட்டங்கள், பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கவேண்டும். பழைய கொடி கம்பங்களை புதுப்பித்தும், புதிய கொடிகம்பங்களை நட வேண்டும் என ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கான ஏற்பாடுகளை கழக முன்னோடிகள் செய்ய வேண்டும். என பேசினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞர் அணி செல்வக்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் சொர்ணகுமார், சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் திருச்செந்தூர் செங்குழி ரமேஷ், ஆழ்வை கிழக்கு சதீஷ்குமார், ஆழ்வை மத்திய பகுதி நவீன்குமார், ஸ்ரீவை கிழக்கு கோட்டாளம், உடன்குடி கிழக்கு இளங்கோ, மேற்கு பாலசிங், நகர செயலாளர்கள் காயல்பட்டனம் முத்துமுகமது, திருச்செந்தூர் வாள் சுடலை, ஆத்தூர் பேரூராட்சி தலைவர் கமால்தீன், புன்னைக்காயல் பஞ். தலைவர் சோபியா, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் கல;ல் ரகுமான், மீனவரனி ஸ்ரீதர் ரொட்ரிக்கோ உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தனது பொறுப்புக்கான வேலையைத்தவிர மற்ற அனைத்து வேலைகளையும் பார்க்கும்

# ஆளுநர், தனது உள்ளடி வேலைகளை நிறுத்திக் கொள்வது நல்லது!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, செப். 4-

தனது பொறுப்புக்கான வேலைகளைத் தவிர மற்ற அனைத்து வேலைகளையும் பார்க்கும் ஆளுநர் ஆர்.என். ரவி, தனது உள்ளடி வேலைகளை நிறுத்திக் கொள்வது நல்லது என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.




இதுகுறித்து 3.9.2024 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாடு ஆளுநர் பொறுப்பில் உள்ள ஆர்.என்.ரவி இந்தப் பதவிக்கு வந்த காலத்திலிருந்தே தேவையற்ற வீண் விவாதங்களை கிளப்பி வருகிறார். ஆளுநர் அலுவலகத்தையே ஆர்.எஸ்.எஸ். கிளை அலுவலகம் போல மாற்றி வைத்துள்ள இவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு எதிராக ஒரு போட்டி அரசாங்கத்தையே நடத்தி வருகிறார்.

இவருடைய அத்துமீறலையும், அராஜகத்தையும் உச்சநீதிமன்றமே பலமுறை கண்டித்த பிறகும் இவர் திருந்துவதாக இல்லை. இதற்கு சமீபத்திய உதாரணமாக பள்ளி விழா ஒன்றில் பேசும் போது தமிழ்நாடு உள்ளிட்ட மாநில பாடத் திட்டங்கள் மிகவும் மோசமாக இருக்கிறது என்று மட்டம் தட்டியுள்ளார். அத்துடன் ஒன்றிய பாடத் திட்டம் தான் மிகவும் உயர் நிலையில் இருக்கிறது என்றும் பேசியுள்ளார்.

கல்வி என்பது மாநில அரசுப் பட்டியலில் இருந்தது. அவசர நிலை காலத்தின் போதுதான் கல்வி ஒத்திசைவு பட்டியலுக்கு கொண்டு செல் லப்பட்டது. நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அரசு வகுத்துள்ள புதிய கல்விக் கொள்கை ஒட்டுமொத்த கல்வித்துறையையும் ஒன்றிய பட்டியலுக்கு மாற்ற வகை செய்கிறது. ஒன்றிய அரசின் கல்விக் கொள்கையின் அறிவிக்கப்படாத விளம்பர தூதர் போல செயல்படும் ஆர்.என்.ரவி மாநில அரசுக்கே தெரியாமல் பல்கலைக்கழக துணை வேந்தர்களை அழைத்து ஒன்றிய அரசின் கல்விக்கொள்கையை பின்பற்றுமாறு நிர்ப்பந்திக்கிறார்.

கல்வித்துறையை மாநில அரசுகளிடமிருந்து பறிக்கும் நோக்கத்தோடு செயல்பட்டு வரும் மோடி அரசின் செயல்பாட்டிற்கு வலுச் சேர்க்கும் வகையி லேயே எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் மாநில பாடத் திட்டத்தின் மீது தமிழக ஆளுநர் தாக்குதல் தொடுத்துள்ளார்.

என்.சி.இ.ஆர்.டி. பாடத் திட்டத்தின் லட்சணம் பல முறை சந்தி சிரித்துள்ளது. நீட் போன்ற தேர்வுகளை நடத்தும் முகமையான தேசிய தேர்வு முக மையின் தரம் சமீபத்தில் நடந்த நீட் தேர்வின் போது பல்லைக் காட்டியது.

ஒன்றிய அரசு பரிந்துரைக்கும் பாடத்திட்டம் என்பது அப்பட்டமான மத வெறியை ஊக்கு விப்பதாகவும், அறிவியலுக்கும், பகுத்தறிவுக்கும் எதிரானதாகவும் பல சமயங்களில் இருந்துள்ளது. மதச்சார்பற்ற தன்மை கொண்ட பாடங்களை தானடித்த மூப்பாக என்.சி.இ.ஆர்.டி. நீக்கியதும் நடந்துள்ளது. மறுபுறத்தில் ஆர்.எஸ்.எஸ். கருத்தியலை திணிக்கும் பாடங்கள் திட்டமிட்டு புகுத்தப் படுகின்றன.

மாநில அரசுகளின் பாடத்திட்டத்தில் அந்தந்த மாநிலங்களின் வரலாறு, பண்பாடு, சமூகவியல் ஆகியவையும் இடம் பெறுகின்றன. பன்முகத் தன்மையை வலியுறுத்தும் இந்த பாடத் திட்டம் தான் ஆளுநர் ரவியின் கண்ணை உறுத்துகிறது. ஆளுநர் வேலையைத் தவிர மற்ற அனைத்து வேலைகளையும் பார்க்கும் ஆர்.என்.ரவி தனது உள்ளடி வேலைகளை நிறுத்திக் கொள்ளட்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாமக்கல் கிழக்கு மாவட்டம் - ஒன்றிய - நகர - பேரூர்க் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!



16.08.2024 அன்று நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளுக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் நடைபெறும்.

| வ. எண் | தேதி/நாள் | நேரம் | ஒன்றியம்/ நகரம்/ பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| 1. | 03.09.2024 செவ்வாய்கிழமை | 04.00 PM | நாமக்கல் கிழக்கு மாவட்டம் | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல் |
| 2 | 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை | 10.00 AM | எருமபட்டி ஒன்றியம், எருமபட்டி பேரூர் | சரசு மண்டபம் எருமப்பட்டி |
| 3 | 09.09.2024 திங்கட்கிழமை | 10.00 AM | இராசிபுரம் நகரம் | சுமங்கலி மஹால் லைன்ஸ் கிளப், இராசிபுரம் |
| 4 | | 11.00 AM | புதுச்சத்திரம் ஒன்றியம் (வடக்கு, தெற்கு) | செல்வலட்சுமி மண்டபம், புதன்சந்தை |
| 5 | 10.09.2024 செவ்வாய்கிழமை | 06.00 PM | நாமக்கல் தெற்கு நகரம் | கொங்கு மண்டபம், பரமத்தி ரோடு,நாமக்கல். |
| 6 | 11.09.2024 புதன்கிழமை | 11.00 AM | நாமகிரிப்பேட்டை ஒன்றியம் | மெட்டாலா மைனர் பாக்கியம் மஹால் |
| 7 | | 01.00 PM | சீராப்பள்ளி பேரூர் நாமகிரிபேட்டை பேரூர், புதுப்பட்டி பேரூர் | வாசுவி திருமண மண்டபம் கடைவீதி, நாமகிரிப்பேட்டை |
| 8 | | 05.00 PM | மோகனூர் கிழக்கு ஒன்றியம் மோகனூர் பேரூர் | கொங்கு திருமண மண்டபம் தோப்பூர், மோகனூர் |
| 9 | 12.09.2024 வியாழக்கிழமை | 10.00 AM | இராசிபுரம் ஒன்றியம், பட்டணம் பேரூர், பிள்ளாநல்லூர் பேரூர் | சுமங்கலி மஹால் லைன்ஸ் கிளப், இராசிபுரம். |
| 10 | | 11.00 AM | நாமக்கல் ஒன்றியம் | கொங்கு மண்டபம், பரமத்தி ரோடு, நாமக்கல். |
| 11 | | 06.00 PM | நாமக்கல் மேற்கு நகரம் | KKP திருமண மண்டபம் தேசிய நெடுஞ்சாலை அருகில், நல்லிபாளையம். |
| 12 | 13.09.2024 வெள்ளிக்கிழமை | 10.00 AM | வெண்ணந்தூர் ஒன்றியம் | பாலாஜி மஹால், A2B அருகில், ஆட்டையாம்பட்டி பிரிவு ரோடு |
| 13 | | 12.00 PM | வெண்ணந்தூர் பேரூர் | சுளுக்கு பிள்ளையார் கோவில் திருமண மண்டபம், தங்க சாலை வீதி |
| 14 | | 02.00 PM | அத்தனூர் பேரூர் | சமுதாயக் கூடம், அத்தனூர் புதூர். |
| 15 | | 05.00 PM | நாமக்கல் கிழக்கு நகரம் | NRL திருமண மண்டபம் கொசவம்பட்டி. |
| 16 | 14.09.2024 சனிக்கிழமை | 10.00 AM | சேந்தமங்கலம் ஒன்றியம், சேந்தமங்கலம் பேரூர், காளப்பநாயக்கன்பட்டி பேரூர் | வசந்த மஹால், சேந்தமங்கலம் |
| 17 | | 12.00 PM | கொல்லிமலை ஒன்றியம் | அரப்பளீஸ்வரர் கோவில் திருமண மண்டபம். |

**இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கிளை மற்றும் வார்டு கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கழக சார்பு அணி நிர்வாகிகள், BLA 2,BLC மற்றும் நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கழக முன்னோடிகள், உறுப்பினர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

# எஸ். புதூர் சிங்கம்புணரியில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர் .பெரிய கருப்பன் சிறப்புரை!

சிவகங்கை, செப். 4-

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேருர் கழகங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது.

இதில் ஒரு கட்டமாக திருப்பத்தூர் தொகுதி எஸ். புதூர் ஒன்றியம் மணியார் பட்டி திருமண மண்டபத்திலும் சிங்கம்புணரி யில் காந்திமதி கோல்டன்பேலஸ் திருமண மண்டபத்தில் ஒருங்கிணைந்த ஒன்றியம் பேரூர் கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அவைத்தலை. வர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர்கள் பூமிநாதன் கே. பாலசுப்பிரமணியன் பி.செல்வராஜ் ஆகியோர் வரவேற்றுப் பேசினார்கள்.

கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து எம்.சோமசுந்தரம், பேரூர் கழகச் செயலாளர் கதிர்வேல், அவை தலைவர் சிவக்குமார், பேரூராட்சி துணைத்தலை வர் இந்தியன் செந்தில், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முத்துக்குமார், ஷீலா சொக்கநாதன், பொருளாளர் பாஸ்கரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்கள் புகழேந்தி, சிவசுப்பிரமணியன், சுற்றுச் சூழல் அணிதுணை அமைப்பாளர் அனந்தகிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ், ஒன்றிய கவுன்சிலர் குமரேசன், முன்னாள் ஒன்றிய செயலாளர் வி.பிஜெகன்னாதன், துணைச் செயலாளர் அலாவுதீன், நிர்வாகிகள் செல்வகுமார், தனுஷ் கோடி, அருள்மணி, நாகராஜன், குடோன்மணி, இளைஞரணி அருள் பிரசாத், அஞ்சப்பர் ஜெயராமன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஜெயக்குமார், மீனா மனோகரன், மணி சேகரன், ஒன்றிய கவுன்சிலர்கள் உதயசூரியன், ரம்யா செல்வகுமார், கலைச்செல்வி, ஏ.எல். சந்திரன் வர்த்தக அணி பார்த்திபன், அழகுராஜ், சரவணன், துரைச்சாமி, செந்தில், தீபன், திருமாறன், அமுதன், முரசொலி கார்த்தி, உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### கழக வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர்

# வேப்பூர் வி.எஸ்.பெரியசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 4 -

கழக வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர் வி.எஸ்.பெரியசாமி (வயது 62) நேற்றிரவு இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் ஒன்றியத்தைச் சேர்ந்த கழக வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர் வி.எஸ்.பெரியசாமி நேற்று (3.9.2024) இரவு இயற்கையெய்தினார்.

இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை மறைந்த வி.எஸ்.பெரியசாமி குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.



சிவகங்கையில் நடைபெற்ற தெற்கு ஒன்றியக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ஜெயராமன் பேசினார். உடன் ஒன்றியக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.